# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 83/7 — 1980 අප්‍රේල් 10 වැනි බ්‍රහස්පතින්දා — 1980.04.10

83/7 ஆம் இலக்கம் — 1980 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி.—பி. 21/78

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

டப்ளிவ். எம். ஏ. விஜேரட்ன பண்டா,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, மார்ச் 28, 1980

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 10 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டதும், 1979 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதிய 38/2 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக்கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம், மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், பட்டவகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகம் என அறியப்படும் ஒரு நிறுவகம் (அது இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்நிறுவகம், இலங்கைக் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும் ; இப்பல்கலைக்கழகம் இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

5. சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகட்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள் ,கடமைகள், பணிகள் என்பனவற்றிற்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) மாணவரை அனுமதித்தல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் பேரில், ஆணைக்குழு அங்கீகரிக்கக்கூடியவாறாக மருத்துவக் கல்வியின் அத்தகைய சிறப்புக்கூறுகளில் பட்டவகுப்புக்கு மேற்பட்ட போதனை, பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல் ;

(இ) மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளிலும் வழங்கப்பட வேண்டிய பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கிகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் திர்மானித்தல் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு, மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக்கூறுகளிலும் தேர்ச்சிபெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்துக்கெனப் பட்டவகுப்புக்கு மேற்பட்ட தேர்வுகளை நடாத்துதலும், அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்திருப்பதோடு நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்திசெய்துள்ள ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பட்டவகுப்புக்கு மேற்பட்ட பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவை வழங்குவதற்குத் தகவுடையவரென விதந்துரைத்தலும் ;

(உ) ஆசிரியர், மாணவர், கல்விமான்கள் ஆகியோரைப் பரிமாற்றுவதன் மூலம் அல்லது வேறு வகையில், நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த அல்லது கணிசமான அளவு ஒத்த நோக்கங்களைக் கொண்டவையும், இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையும் ஆன பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் ;

(ஊ) துணைவிதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறாகப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி இடங்களிலும், நிறுவகத்துக்கு அனுமதி கோரும் ஆட்